CIKS

# வளம்

இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையத்தின் செய்திமடல்

காலாண்டுச் செய்திமடல்

ஜூலை 2007 மலர் 3 இதழ் 2

மேலும் தகவல்களுக்கு **www.ciks.org** என்ற இணையத்தளத்தைப் பார்க்கவும்.



## விவசாயிகள் விஞ்ஞானிகள் கலந்துரையாடல் கூட்டம்

இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையம், ஜூன் 22ஆம் தேதியன்று, “பாரம்பரிய வேளாண்மைச் செயல்முறைகளின் விரைவு மதிப்பீடு” (Rapid Assessment of Traditional Agricultural Practices (RATAP)) என்ற தலைப்பில் விவாதம் ஒன்றை அகணியிலுள்ள பயிற்சி கூடத்தில் நடத்தியது. பாரம்பரிய முறைகளைப் பின்பற்றும் விவசாயிகள், விஞ்ஞானிகள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் தொண்டு நிறுவனப் பிரதிநிதிகள் போன்ற பல்வேறு பிரிவினரை ஒன்றிணைத்து மேற்கண்ட தலைப்பில் விவாதிக்க வேண்டும் என்பதே இந்தக் கூட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இந்தக் குழு, விவசாயிகள் சந்திக்கும் பல்வேறு பிரச்சினைகளைப் பட்டியலிட்டது. இதைத் தொடர்ந்து, முக்கியத்துவம் அளிக்க வேண்டிய பிரச்சினைகளைத் தேர்ந்தெடுப்பதற்கான அடிப்படைகள் கண்டறியப்பட்டன. பொதுவாக எல்லா இடங்களிலும் காணப்படுதல், அவ்வப்போது ஏற்படுதல், பொருளாதார இழப்பை ஏற்படுத்தக் கூடியவை, பாரம்பரிய முறைகளைப் பயன்படுத்தி கட்டுப்படுத்தக் கூடியவை மற்றும் தற்போதைய ரசாயன முறைகளைக் கொண்டு கட்டுப்படுத்த முடியாதவை போன்றவை முக்கியத்துவம் அளிக்க வேண்டிய பிரச்சினைகளைக் கண்டறிவதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அடிப்படைகள் ஆகும். இந்த அடிப்படைகளைக் கொண்டு விவசாயிகள் நான்கு முக்கியமான பிரச்சினைகளைக் கண்டறிந்தனர். அவை, தண்டுத் துளைப்பான், கதிர்நாவாய்ப் பூச்சி, எலிகள் மற்றும் பாக்டீரியா இலைக் கருகல் நோய் போன்றவைகளினால் ஏற்படும் பாதிப்புகள் ஆகும். இதைத் தொடர்ந்து, விவசாயிகள், நமது மையத்தினால் தேர்ந்தெடுக்கப்பட்ட இயற்கைவழி வேளாண்மை நுட்பங்களை மதிப்பீடு செய்தனர். இந்தக் கூட்டத்தில், சிதம்பரத்திலுள்ள அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் பூச்சியியல் துறை பேராசிரியர்கள் டாக்டர் அறிவுடைநம்பி அவர்களும், டாக்டர் அண்ணாமலை ஆனந்தன் அவர்களும், சீர்காழி மற்றும் அதன் சுற்று வட்டாரங்களைச் சேர்ந்த 21 விவசாயிகளும், நமது மையத்தின் சீர்காழி அலுவலக பணியாளர்கள் ஆறு பேரும் கலந்து கொண்டனர். இந்தக் கூட்டத்தின் முடிவில் விவசாயிகள் மற்றும் விஞ்ஞானிகள் அடங்கிய குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டது. இந்தக் குழு எந்த முறையில் பாரம்பரிய முறைகளைச் சோதனை செய்யலாம் என்று முடிவு செய்து செயல்படுத்தும்.



*பாரம்பரிய வேளாண்மைச் செயல்முறைகளைப் பற்றிய விவாதத்தில் ஈடுபட்டுள்ள குழு உறுப்பினர்கள்*

## பொது இலவச மென்பொருள் பயிற்சி முகாம்

“என்.ஜி.ஓ.-இன்-ஏ-பாக்ஸ்” (NGO-in-a-box) என்ற தலைப்பில் தொண்டு நிறுவனங்களுக்கான பொது இலவச மென்பொருள் குறித்த (Free Open-Source Software) பயிற்சி முகாம் ஜூன் 25 - 29ஆம் தேதிகளில், கர்நாடகாவிலுள்ள ஸ்ரீரங்கபட்னா என்ற இடத்தில் நடைபெற்றது. இந்தப் பயிற்சி முகாம் பெங்களூரிலுள்ள ஹீவாஸ் (HIVOS) நிறுவனத்தின் உதவியுடன் மஹிதி இன்ஃபோடெக் (Mahiti Infotech) என்ற நிறுவனத்தினால் நடத்தப்பட்டது. நமது மையத்தின் செய்தித் தொடர்பு ஆலோசகர் திரு. ஆனந்த் ராமசந்திரன் அவர்கள் இந்தப் பயிற்சி முகாமில் கலந்து கொண்டார். இந்தப் பயிற்சியில் பல்வேறு பொது இலவச மென்பொருட்களின் பயன்பாடுகள் குறித்து விளக்கப்பட்டன. பயிற்சி முகாமில் பொது இலவச மென்பொருள் பயன்பாட்டிற்கு மாறுவதினால் ஏற்படக்கூடிய ஒழுங்கு நெறிமுறை, பொருளாதார மற்றும் நடைமுறை பிரச்சினைகள் குறித்து விவாதிக்கப்பட்டன. திரு. ஆனந்த் அவர்கள், “கல்வி மற்றும் சமுதாய மாற்றத்திற்கான வீடியோ விளையாட்டுகள்” மற்றும் “இணையதளத்தில் புதுமைகளைச் செயல்படுத்தும் முறைகள்” என்ற தலைப்புகளில் பயிற்சி நடத்தினார். இந்தப் பயிற்சி முகாமில் கற்றறிந்த விவரங்களைக் கொண்டு இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையம் பொது இலவச மென்பொருள் பயன்பாட்டிற்குப் படிப்படியாக மாற உள்ளது.



# செயல் திட்டங்கள் - ஒரு பார்வை

**விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் இயற்கை வேளாண்மைத் திட்டம் - II**

இந்தத் திட்டத்தை ஃபோர்ட் நிறுவனத்தின் உதவியுடன் இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையம் செயல்படுத்தி வருகிறது. இந்தத் திட்டத்திற்காக, காஞ்சிபுரம், திருவள்ளூர், திருவண்ணாமலை மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களிலிருந்து சுமார் 400 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இந்தப் பருவத்தில், சுமார் 112.58 ஏக்கர் நிலத்தில் இயற்கைவழி சாகுபடி மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஏப்ரல் 7ஆம் தேதியன்று, ஃபோர்ட் நிறுவனத்தின், இந்தியப் பிரதிநிதி டாக்டர். கணேசன் பாலசந்தர் அவர்கள் மையத்தின் சுக்கன்கொல்லை பண்ணைக்கு வந்திருந்தார். விவசாயிகள் மற்றும் சங்கப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடினார். இந்த ஆய்வுத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் பற்றியும், பல்கலைக்கழகங்கள் மற்றும் ஆராய்ச்சி மையங்களுடன் இணைந்து செயல்படுவதின் மூலம் திட்டத்தை மேம்படுத்துவதற்கான சாத்தியக் கூறுகள் பற்றியும் இவருக்கு எடுத்துக் கூறப்பட்டது. ஏப்ரல் 23ஆம் தேதியன்று, இயற்கைவழி வேளாண்மைச் சான்றிதழ் பெறுவதற்காகப் பெயர் பதிவு செய்து கொண்ட நாகப்பட்டினம் மாவட்ட விவசாயிகளுக்கு, அல்லிவிளாகம் கிராமத்தில் "அகக் கட்டுப்பாட்டு முறைமையின் முக்கியத்துவம் மற்றும் இயற்கைவழி வேளாண்மைச் சான்று பெறுவதற்கான வழிமுறைகள்" என்ற தலைப்பில் பயிற்சி அளிக்கப்பட்டது. காஞ்சிபுரம் இயற்கை விவசாயிகள் உற்பத்தியாளர் சங்கத்தின் பொதுக்குழு கூட்டமும், மேலாண்மை குழு கூட்டமும் மே 26ஆம் தேதியன்று நடைபெற்றன.

மே 5 மற்றும் 20ஆம் தேதிகளில், இளையான்குடி மற்றும் முருகமங்கலம் கிராமப் பயனீட்டாளர்களுக்கு அகக் கட்டுப்பாட்டு முறைமை பதிவேடுகளைப் பராமரிக்கும் முறைகள் பற்றி இரண்டு பயிற்சிகள் நடத்தப்பட்டன. திருவள்ளூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டப் பயனீட்டாளர்களுக்கு "இயற்கைவழி வேளாண்மையின் முக்கியத்துவம் மற்றும் இயற்கை வேளாண் தொழிற்நுட்பங்கள்" என்ற தலைப்பில் முறையே ஜூன் 14 மற்றும் 15ஆம் தேதிகளில், இரண்டு பயிற்சிகள் நடத்தப்பட்டன. இந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாக, தொண்டு நிறுவனங்களுக்கு இயற்கைவழி வேளாண்மைத் தொடர்பான பயிற்சிகள் நடத்தப்பட்டன. இதில், தர்மபுரியிலுள்ள, ட்ரைபல் ஹெல்த் இனிஷியேட்டிவ் (Tribal Health Initiative), கன்னியாகுமரியிலுள்ள நார்டெப், (NARDEP) மற்றும் திருநெல்வேலியிலுள்ள காஸ்ட் (CAST) நிறுவனங்களுடன் இணைந்து செயல்படும் விவசாயிகளுக்கு முறையே மே 16 - 19, ஜூன் 4 - 9 மற்றும் ஜூன் 11 - 16ஆம் தேதிகளில், பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டன. இதில், இயற்கைவழி வேளாண்மையின் முக்கியத்துவம், ரசாயன முறை வேளாண்மைக்கான மாற்று முறைகள் மற்றும் இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையத்தினால் பின்பற்றப்படும் வேளாண்மைத் தொழிற்நுட்பங்கள் குறித்து பயிற்சி அளிக்கப்பட்டன.

**உணவுக்கு உத்திரவாதம் அளிக்கும் இயற்கை வேளாண்மைத் திட்டம்**

புதுதில்லியிலுள்ள கபார்ட் (CAPART) நிறுவனத்தின் உதவியுடன் காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள பத்து கிராமங்களில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அனைத்து கிராமங்களிலும் சங்கக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. இந்தக் கூட்டங்களில், விவசாயிகள் தங்களுடைய அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர். எடையூர், நரப்பாக்கம் மற்றும் கோரப்பட்டு கிராமங்களில் இயற்கைவழி நெல் சாகுபடி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், மூன்று விவசாயிகள் 18 பாரம்பரிய நெல் ரகங்களைப் பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். மே 24ஆம் தேதியன்று, வளத்தோடு கிராமப் பயனீட்டாளர்களுக்கு இயற்கைவழி வேளாண்மைத் தொழில்நுட்பங்கள், பூச்சி மற்றும் நோய் மேலாண்மை, தாவரக் கரைசல் தயாரிப்பு, அசோலா மற்றும் மண்புழு உர உற்பத்தி பற்றி பயிற்சி அளிக்கப்பட்டது. ஜூன் 11, 12, 16 மற்றும் 26ஆம் தேதிகளில், முறையே விநாயகநல்லூர், எடையூர், கொளத்தாஞ்சேரி மற்றும் நரப்பாக்கம் கிராமப் பயனீட்டாளர்களுக்கு நெற்பயிரைத் தாக்கும் பூச்சிகள் மற்றும் நோய்கள், இயற்கைவழி பூச்சி மற்றும் நோய் மேலாண்மை மற்றும் அகக் கட்டுப்பாட்டு முறைமை குறித்த பயிற்சிகள் அளிக்கப்பட்டன. இந்தப் பயிற்சிகளில் சுமார் 147 விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**நெற்பயிர் சாகுபடி - விதை முதல் சந்தை வரை**

பெங்களூரிலுள்ள ஹீவாஸ் (HIVOS) நிறுவனத்தின் உதவியுடன் செயல்படுத்தப்படும் இந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாக, சித்திரவாடி, கொளத்தாஞ்சேரி மற்றும் கலியப்பேட்டை கிராமங்களில் மாதாந்திர சங்கக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. இந்தத் திட்டத்தின் கீழ் கடந்த ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பணிகள் குறித்த வருடாந்திர அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும், திட்டம் செயல்படுத்தப்படும் பகுதிகளிலிருந்து மண் மற்றும் தண்ணீர் மாதிரிகள் ஆய்விற்காகச் சேகரிக்கப்பட்டுள்ளன. "இயற்கைவழி சாகுபடியில் மகசூல் மதிப்பீடு" என்ற தலைப்பில் அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டு வருகிறது.

**காய்கறிகளில் விருட்சாயுர்வேதப் பரிசோதனை**

அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் உதவியுடன் செயல்படுத்தப்படும் இந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாக, வெண்டையில், சாறு உறிஞ்சும் பூச்சிகளைக் கட்டுப்படுத்துவதற்கான ஆய்வுகள் அகணியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கத்தரிக்கான இயற்கை சாகுபடி தொழில்நுட்பங்களை நிர்ணயிப்பதற்காக, அகணியில் கத்தரி சாகுபடி செய்யப்பட்டுள்ளது. வெண்டையில் எருதின் பொருட்களிலிருந்து தயாரிக்கப்பட்ட பஞ்சகவ்யத்தை வெவ்வேறு அடர்த்திகளில் பயன்படுத்துவதினால் ஏற்படும் விளைவுகளைக் கண்டறிவதற்கான ஆய்வு நிழல்வலைக் கூடத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. காய்கறிகளுக்கான இயற்கை சாகுபடி தொழிற்நுட்பங்களை நிர்ணயிப்பதற்காக, பல விவசாயிகளின் வயல்களில் இயற்கைவழி காய்கறிச் சாகுபடி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், இந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாக, "கத்தரியைத் தாக்கும் முக்கிய பூச்சிகளைத் தாவரக் கரைசல்களைப் பயன்படுத்தி கட்டுப்படுத்துதல்" என்ற தலைப்பில் ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஜூன் 20ஆம் தேதியன்று, தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் பணியாளர்களுக்கு "இயற்கைவழி காய்கறிச் சாகுபடி" என்ற தலைப்பில் பயிற்சி முகாம் ஒன்று நடத்தப்பட்டது. இந்தப் பயிற்சி முகாமில் எட்டு தன்னார்வ தொண்டு நிறுவனங்களைச் சேர்ந்த 13 பேர் கலந்து கொண்டனர்.

**தாவரக் கரைசல்களின் சேமிப்புக் காலத்தை அதிகரிக்கும் திட்டம்**

இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையம், அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் உதவியுடன் தாவரக் கரைசல்களின் சேமிப்புக் காலத்தை அதிகரிக்கும் திட்டத்தை சீர்காழியில் செப்டம்பர் 2005 முதல் செயல்படுத்தி வருகிறது. அசுவுணிகள் மற்றும் படைப்புழுக்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் மூலம், அசுவுணிகளில் 4% வேப்ப எண்ணெய் சோப்புக் கரைசல் உண்ணா நிலையையும்

# நிகழ்வுகள் - ஒரு அலசல்

படைப்புழுக்களில், அரிவாள்மனை பூண்டு கஷாயம் 98.34% உண்ணாநிலையையும் ஏற்படுத்துகின்றன என்பது கண்டறியப்பட்டுள்ளன. *எபிலாக்னா* வண்டுகளை நிழல்வலைக் கூடத்தில் வளர்ப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அண்ணாமலை பல்கலைக்கழகப் பூச்சியியல் துறை பேராசிரியர் டாக்டர் எஸ். அறிவுடைநம்பி அவர்கள் நமது பூச்சி வளர்ப்புக் கூடத்திற்கு ஜுன் 20ஆம் தேதியன்று வந்திருந்தார். இதைத் தொடர்ந்து, இதுவரை அசுவுணிகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் முடிவுகளைப் பற்றி சீர்காழி அலுவலகப் பணியாளர்களுடன் கலந்துரையாடினார்.

**தொழில்நுட்ப ஆதார மையத்தின் செயல் பாடுகள்**

இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையத்தின் தொழில்நுட்ப ஆதார மையம் (Technology Resource Centre) அக்டோபர் 2005 முதல் செயல்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக, இயற்கைவழி வேளாண்மைத் தொழில்நுட்பங்கள் திருவள்ளூர், திருவண்ணாமலை மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. சுக்கன்கொல்லையில் கட்டப்பட்டுள்ள தொழில்நுட்ப ஆதார மையம், ஏப்ரல் 20ஆம் தேதியன்று திறந்து வைக்கப்பட்டது. விவசாயிகளின் வயல்களில் செயல்படுத்தப்பட்டு வரும் வேளாண்மைத் தொழில்நுட்பங்கள் மதிப்பீடு செய்யப்பட்டன. இந்த மதிப்பீட்டின் முடிவுகள் திருப்திகரமானதாக உள்ளன. பெரும்பாலான விவசாயிகள் அதிக பட்சமாகப் பங்கெடுத்து தொழில்நுட்பங்களைச் சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறார்கள். இயற்கைவழி வேளாண்மைத் தொழில்நுட்பங்களைச் செயல்படுத்துவதில் சுமார் 20 விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். பயிற்சிக்கான பல்வேறு மாதிரிகள் உருவாக்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டிலுள்ள தொண்டு நிறுவனங்களுக்கு ஜுலை 9ஆம் தேதி முதல் 13ஆம் தேதி வரை, பயிற்சியாளர் பயிற்சி முகாம் ஒன்று நடத்தப்பட உள்ளது.

**சுக்கன்கொல்லையில் நடந்த பணிகள்**

சுக்கன்கொல்லையிலுள்ள நமது ஆய்வுப் பண்ணையில் ஏழு பாரம்பரிய நெல் ரகங்கள் பயிரிடப்பட்டுள்ளன. தக்காளியில் ஏற்படும் நாற்றழுகல் நோய் தாக்குதலைக் கட்டுப்படுத்து வதற்கான புகைமூட்ட ஆய்வுகள் தொடங்கப் பட்டுள்ளன. மக்கு உரத் தயாரிப்பு முறைகளின் மகசூல் மதிப்பீட்டு ஆய்வின் மூலம் *ட்ரைகோடெர்மா விரிடி*, மக்கு உரத் தயாரிப்பைத் துரிதப்படுத்துவது கண்டறியப்பட்டுள்ளது. நெல் மற்றும் நிலக் கடலையில் இயற்கை உரங்களால் ஏற்படும் விளைவுகளைக் கண்டறிவதற்கான ஆய்வுகள் வயல்களில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தக்காளியில், காய்த்துளைப்பான் *(ஹெலிகோவெர்பா ஆர்மிஜிரா)* தாக்குதலைத் தாவரக்கரைசல்களைத் தெளித்து கட்டுப்படுத்துவதற்கான ஆய்வுகள் தொடங்கப்பட்டுள்ளன.

**காம்பாஸ் கூட்டம்**

காம்பாஸ் திட்டத்தின் சர்வதேச நிர்வாகக் குழு கூட்டம் (International Management Meeting) ஏப்ரல் 22 - 28ஆம் தேதிகளில், நெதர்லாந்தில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் ஆ.வே. பாலசுப்பிரமணியன் அவர்கள் கலந்து கொண்டார். அடுத்தக்கட்ட காம்பாஸ் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான முறைகள் மற்றும் செயல்பாடுகள் குறித்து இந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. இந்தக் கூட்டத்தில், காம்பாஸ் திட்டத்தின் ஆசிய, ஆப்பிரிக்க மற்றும் லத்தீன் அமெரிக்க ஒருங்கிணைப்பாளர்களும், சர்வதேச நிர்வாகக் குழு உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

**வேளாண் பல்கலைக்கழகத்திற்குப் பயணம்**

ஏப்ரல் 25ஆம் தேதியன்று, ஆ.வே. பாலசுப்பிரமணியன் அவர்கள் நெதர்லாந்திலுள்ள வாகனிங்கன் வேளாண் பல்கலைக்கழகத்தின் மரபணு ஆதாரங்கள் மையத்திற்கு (Centre for Genetic Resources) சென்றிருந்தார். மேலும், இந்த மையத்தின் இயக்குனர் டாக்டர். பெர்ட் விஸ்ஸர் அவர்களைச் சந்தித்து மையத்தின் செயல்பாடுகள் குறித்தும், ஆசியாவின் களப்பணி திட்டங்களில் இணைந்து செயல்படுவது குறித்தும் கலந்துரை யாடினார். இதைத் தொடர்ந்து, இந்த மையத்திலுள்ள குளிர் சேமிப்புப் பகுதியையும், விதை வங்கியையும் பார்வையிட்டார்.

**பாரம்பரிய வேளாண்மை பற்றிய உரை**

ஆ.வே. பாலசுப்பிரமணியன் அவர்கள் மே 15ஆம் தேதியன்று, தேசிய நாட்டுப் புறவியல் உதவி மையத்திற்குச் சென்றிருந்தார். அங்கு அவர் "இன்றைய தற்சார்பு வேளாண்மைக்குத் தேவையான பாரம்பரிய வேளாண் அறிவையும், தொழில்நுட்பங்களையும் வளர்த்தல்" என்ற தலைப்பில் உரையாற்றினார். இந்த நிகழ்ச்சியில், ஆராய்ச்சி மையத்தின் ஊழியர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் வேறு சில விருந்தினர்களும் கலந்து கொண்டனர்.

**புது தில்லி பயணம்**

ஆ.வே. பாலசுப்பிரமணியன் அவர்கள் மே 30ஆம் தேதியன்று, புது தில்லியிலுள்ள இந்திய வேளாண் ஆய்வுக் கழகத்திற்கு (ICAR) சென்றிருந்தார். அங்கு அவர், ஆய்வுக் கழகப் பயிர் பாதுகாப்பு துறையின் துணை இயக்குனர் ஜெனரல் டாக்டர் டி.பி. ராஜேந்திரன் அவர்களைச் சந்தித்து, ஆய்வுக் கழகத்துடன் இணைந்து செயல்படுவதற்கான சாத்தியக் கூறுகள் பற்றி கலந்துரையாடினார். இதைத் தொடர்ந்து, மே 31ஆம் தேதியன்று, இந்திய வேளாண் ஆய்வு நிறுவனத்திலுள்ள (IARI), தேசிய பயிரின மரபணு ஆதார மையத்திற்கு (National Bureau of Plant Genetic Resources) சென்றிருந்தார். அங்கு அவர், மையத்தின் பயிர் பாதுகாப்பு பிரிவின் இயக்குநர் டாக்டர். எஸ்.கே. சர்மா அவர்களையும், தலைவர் டாக்டர் ஏ.கே. சிங் அவர்களையும் மற்றும் முதுநிலை விஞ்ஞானி டாக்டர் கல்யாணி ஸ்ரீநிவாசன் அவர்களையும் சந்தித்தார். மேலும், இந்த மையத்துடன் இணைந்து விவசாயிகளின் வயல்களில் பாரம்பரிய விதை ரகங்களைப் பாதுகாப்பதற்கான *இன்-சிட்டு* முறை) சாத்தியக் கூறுகள் பற்றி விவாதித்தார்.

**பெங்களூர் பயணம்**

ஜுன் 1ஆம் தேதியன்று, ஆ.வே. பாலசுப்பிரமணியன் அவர்கள் பல்வேறு கூட்டங்களில் கலந்து கொள்வதற்காக பெங்களூர் சென்றிருந்தார். காலையில், காம்பாஸ் ஆசிய குழு கூட்டத்தில், எப்.ஆர்.எல்.எச்.டி பிரதிநிதிகளுடன் கலந்து கொண்டார். இந்தக் கூட்டத்தில் எப்.ஆர்.எல்.எச்.டி. நிறுவனத்துடனான ஒப்பந்தம் முடிவு செய்யப்பட்டது. மேலும், தேசிய அளவிலான ஒருங்கிணைந்த செயல்பாடுகளும் திட்டமிடப்பட்டன. இதைத் தொடர்ந்து, ஆ.வே. பாலசுப்பிரமணியன் அவர்கள், பெங்களூரிலுள்ள வேளாண்மை அறிவியல் பல்கலைக்கழகத்தின் பயிர் உற்பத்தி மற்றும் மரபியல் துறையைச் சேர்ந்த டாக்டர் கணேஷய்யா அவர்களையும், பேராசிரியர் குல்கர்ணி அவர்களையும் சந்தித்தார். இதன் பிறகு, ஹிவாஸ் (HIVOS) நிறுவனத்தைச் சேர்ந்த திரு. பிஷ்வதீப் கோஷ் அவர்களையும், டாக்டர் முரளி அவர்களையும் சந்தித்து உரையாடினார். இதைத் தொடர்ந்து, பெங்களூரிலுள்ள இந்திய விஞ்ஞான மையத்தின் (Indian Institute of Science) பேராசிரியர் டாக்டர் எம்.எஸ். ஹெக்டே அவர்களைச் சந்தித்தார். இந்தச் சந்திப்பில், நாம் தயாரிக்கும் *ஷரா* வடிவிலான தாவரக் கரைசல்களின் வேதியியல் பண்புகளைக் கண்டறிவதற்கும், ஆய்வுகளை மேற்கொள்வதற்கும், வேண்டிய உதவிகளை டாக்டர் எம்.எஸ். ஹெக்டே அவர்கள் அளிப்பார் என்று முடிவு செய்யப்பட்டது.

**பாண்டிச்சேரி பயணம்**

ஜுன் 9-11 ஆம் தேதிகளில், ஆ.வே. பாலசுப்பிர மணியன் அவர்களும், கே. விஜயலட்சுமி அவர்களும் பாண்டிச்சேரிக்குச் சென்றிருந்தனர். அங்கு அவர்கள் ஸ்ரீ அரபிந்தோ சொசைட்டியின் செயற்குழு உறுப்பினர் ஸ்ரீ விஜய் போடர் அவர்களையும், ஆராய்ச்சி ஒருங்கிணைப்பாளர் டாக்டர் சம்பத் அவர்களையும் சந்தித்தனர். மேலும், ஸ்ரீ அரபிந்தோ சொசைட்டியுடன் இணைந்து செயல்படுவதற்கான சாத்தியக் கூறுகள் பற்றி கலந்துரையாடினர்.

**இயற்கைவழி வேளாண் விளை பொருட்கள் - குழு விவாதம்**

இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையம், ஜுன் 20ஆம் தேதியன்று, "இயற்கைவழி உணவுப் பொருள்கள்" என்ற தலைப்பில் குழு விவாதம் ஒன்றை நடத்தியது. இந்தக் கூட்டம் பெங்களூரிலுள்ள ஜீனஸ் ஏ.பி. நிறுவனத்தைச் சேர்ந்த திரு. கிஷோர் அவர்களால் நடத்தப்பட்டது. நமது மையத்தின் "ஆரோக்கியம்" திட்டத்தின் கீழ் உள்ள சுமார் பத்து நுகர்வோர்கள் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர். இந்தக் கூட்டத்தில், ஆரோக்கியம் திட்டத்தின் தற்போதைய நிலை மற்றும் நுகர்வோர்களின் எதிர்பார்ப்புகள் குறித்து கலந்துரையாடப்பட்டது.

## புத்தகங்களும் வீடியோ படங்களும்

### இயற்கை சாகுபடி தொழில்நுட்பங்கள் - நெல், நிலக்கடலை, தக்காளி மற்றும் வெண்டை










இந்த நான்கு சிறு கையேடுகளும் இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையத்தினால் தொகுக்கப்பட்டு, ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் வேளாண் துறையினால் (FAO), தொழில்நுட்பக் கூட்டுறவு திட்டத்தின் (Technical Cooperation Project) கீழ் வெளியிடப்பட்டன. இந்தக் கையேடுகளில், நெல், நிலக்கடலை, தக்காளி மற்றும் வெண்டை பயிர்களுக்கான இயற்கைவழி சாகுபடி நுட்பங்கள் சுருக்கமாக விவரிக்கப்பட்டுள்ளன. மேலும், நிலத்தேர்வு, உரமிடுதல், பூச்சி மற்றும் நோய் மேலாண்மை மற்றும் அறுவடைக்குப் பின் மேற்கொள்ளப்படும் செயல் முறைகள் பற்றிய விவரங்களும் சுருக்கமாகத் தொகுத்தளிக்கப்பட்டுள்ளன.

இந்தக் கையேடுகளைப் பெற விரும்புவோர் “இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையத்தைக்” கீழ்கண்ட முகவரியில் அணுகவும். தபால் மூலம் பெற விரும்பினால் தபால் செலவு ரூ.10/-ஐ அனுப்பவும்.

### தமிழ்நாட்டில் பின்பற்றப்படும் நெல், நிலக்கடலை, தக்காளி மற்றும் வெண்டைக்கான இயற்கைவழி சாகுபடி நுட்பங்கள் (ஆங்கிலம்)

இந்தப் புத்தகம் ஐக்கிய நாடுகளிலுள்ள உணவு மற்றும் வேளாண் துறைக்காக




(FAO) தொழில் நுட்பக் கூட்டுறவு திட்டத்தின் கீழ் இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையத்தினால் தொகுக்கப்பட்டது. இந்தப் புத்தகத்தில், நிலத்தேர்வு முதல் சேமிப்பு வரையிலான இயற்கைவழி சாகுபடி நுட்பங்கள் பற்றி விவரிக்கப்பட்டுள்ளன. மேலும், விதைத்தேர்வு, உரமிடுதல், பூச்சி மற்றும் நோய் மேலாண்மை பற்றிய விவரங்களும் தொகுத்தளிக்கப்பட்டுள்ளன.

இந்தக் கையேட்டை www.fao.org.in/report என்ற இணையத்தள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

## வருகையாளர் பதிவேடு

- ஏப்ரல் 18ஆம் தேதியன்று, ரூரல் டெக்னாலஜி பிசினஸ் இங்குபேட்டர் (RTBI) நிறுவனத்தைச் சேர்ந்த செல்வி. ஹரிணி, செல்வி. சுஜாதா மற்றும் திரு. சாகர் அவர்கள் நமது மையத்தின் சீர்காழி அலுவலகத்திற்கு வந்திருந்தனர்.
- ஏப்ரல் 22ஆம் தேதியன்று, மயிலாடுதுறையிலுள்ள ஏ.ஆர்.சி. குழுமத்தைச் சேர்ந்த திரு. ஸ்ரீதேவன் அவர்களும், திரு. ராஜேஷ் சந்திரன் அவர்களும் நமது மையத்தின் செயல்பாடுகளைப் பற்றி அறிந்து கொள்வதற்காக சீர்காழி அலுவலகத்திற்கு வந்திருந்தனர்.
- மே 5ஆம் தேதியன்று, சென்னை பல்கலைக்கழகத்தின், தாவரவியல் உயர்கல்வி மையத்தைச் சேர்ந்த திரு. மணி ஜெயபிரகாஷ்வேல் அவர்கள் நமது மையத்திற்கு வந்திருந்தார்.
- ஜூன் 1ஆம் தேதியன்று, ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த செல்வி. காத்தரீன் ஹார்வே அவர்களும், மூன்று பேர் அடங்கிய ஒரு குழுவும் இயற்கை வேளாண்மைத் தொழில்நுட்பங்களைப் பற்றி அறிந்து கொள்வதற்காக சுக்கன்கொல்லையிலுள்ள நமது ஆய்வுப் பண்ணைக்கு வந்திருந்தனர்.
- ஜூன் 1ஆம் தேதியன்று, திருநெல்வேலியிலுள்ள காஸ்ட் (CAST) நிறுவனத்துடன் இணைந்து பணியாற்றும் 30 பேர் அடங்கிய விவசாயிகள் குழு நமது சுக்கன்கொல்லை பண்ணைக்கு வந்திருந்தனர்.
- ஜூன் 9ஆம் தேதியன்று, தான் (Dhan Foundation) நிறுவனத்தின் திட்ட அலுவலர் திரு. எம். எஸ். சண்முகம் அவர்கள் நமது மையத்திற்கு வந்திருந்தார்.
- ஜூன் 13ஆம் தேதியன்று, அண்ணா பல்கலைக்கழக கே.பி. சந்திரசேகர் இணையம் மற்றும் தொலைத்தொடர்பு தொழில்நுட்ப மையத்தின் பேராசிரியர் சி.என். கிருஷ்ணன் அவர்கள் நமது மையத்திற்கு வந்திருந்தார்.
- ஜூன் 13ஆம் தேதியன்று, சென்னையிலுள்ள ஆர்கானிக் ஹார்வஸ்ட் (Organic Harvest) நிறுவனத்தைச் சேர்ந்த திரு. கிருஷ்ணன் அவர்கள் நமது மையத்திற்கு வந்திருந்தார்.
- ஜூன் 18ஆம் தேதியன்று, கொல்கத்தாவிலுள்ள ராமக்கிருஷ்ணா மிஷினிலிருந்து ஸ்வாமி திவ்ய சுக்கானந்தா அவர்களும், ஸ்வாமி எத்திராஜ் சைதன்யா அவர்களும் நமது சுக்கன்கொல்லை பண்ணைக்கு வந்திருந்தனர்.
- ஜூன் 29ஆம் தேதியன்று, இலங்கையில் செயல்படுத்தப்பட்டு வரும் "ஆபரேஷன் டேஸ் வொர்க்" (Operation days work) திட்டத்தின் பிரதிநிதி திரு. நாகேந்திரன் அவர்களும் ஐந்து பேர் அடங்கிய குழுவும் நமது மையத்திற்கு வந்திருந்தனர்.

ஆசிரியர் குழு : இரா. அபர்ணா தூயவதி, து. து. நிர்மலா தேவி & டாக்டர் கே. விஜயலட்சுமி

வடிவமைப்பு : ரா. ஆனந்த் & எஸ். ரமேஷ்

நூல்-அஞ்சல்

பெறுநர்

CIKS

30, காந்திமண்டபம் சாலை, கோட்டூர்புரம், சென்னை - 600 085.

தொலைபேசி : 91-044-24471087, 24475862 தொலைநகல் : 91-044-24471114

மின்னஞ்சல் : **info@ciks.org** இணையத்தளம் : **www.ciks.org**